முருகப்பெருமான் துணை

இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 655**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

15.07.2021, வியாழக்கிழமை

1. ஞானச்சுடரே அரங்கா போற்றி
ஞானிகள் துணைகொண்ட தேசிகா போற்றி
வானவர் மெச்சும் வள்ளல் தன்மை
வையகம் அடைய தர்மத்தை வளர்த்து வரும்
2. வருகின்ற அரங்கனே போற்றிபோற்றி
வல்லமைபட சுப்ரமண்யர் யானும்
தருகின்றேன் அரங்கனுக்கு ஞானஅறிவுரைஆசி
தர்மத்தால் மாதவபலத்தால் இந்தஉலகில்
3. உலகினில் என் அவதாரமாக வந்த
உயர் ஞானியே ஆறுமுக அரங்கனே
தயவான உன் சக்தியின் மூலமாக
தரணியே முழுமை பாதுகாப்பு பெறும்
4. காப்பு தருகின்ற சூட்சும சக்தியும்
கந்தவேலனின் பரிபூரண ஞான சக்தியும்
ஒப்புகொண்டு அவதாரத்தின் வழி நீஉள்ளடக்கி
உலகோர்க்கு ஞானமாக அருளிவர
5. வருகின்ற அரங்கன் தொண்டர்படைகள் மூலம்
வையகமே பெரும் பாதுகாப்பு காணும்
உறுதிகொண்ட அரங்கன் தர்மமும் கொள்கையும்
உலகோரை மாற்றி உலகஞானம் தந்தருளி
6. அருளாக அனைத்து வரமாக
ஆக்கமாக அழியாமையின் ஒரே சக்தியாக
பேருலகில் அவதாரம் நிகழ்த்தும் அரங்கனே
புண்ணியனே உன் வழிகாட்டலின் மூலமாக
7. ஆகவே இவ்வுலகம் பெருமாற்றம்
ஆறுமுகன் ஞானமாகக் கொண்டு நடந்தேறும்
மிகைபட அரங்கன் நாமஜெபத்தை மேலான தர்மத்தை கடைபிடிக்கும் மக்கள்மூலமே
மூலமே இந்த பேருலகம் ஞானயுகமாகும் முழுமைபட ஞானிகளின் ஆட்சியுமாகமாறி இனிதே
8. இனிதே கலியுகம் ஞானயுகமாகும்
எந்நாளும் உலகில் பாதுகாப்பு கூடி
கனிவுமிக்க வேலவன் சக்தியாலே கலியுகம்
மகா அற்புதத்தை அடையும்

ஞான அறிவுரை ஆசி முற்றே —சுபம்—